## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

## அசல் வழக்கு எண்.188/2018

நாள்: 26.04.2024

பெயர்: ஜெயபாலன் (வா.சா.1) த/பெ:கலியன்(எ) கலியபெருமாள்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...

1) நான் சர்வே எண்.397/3, 397/4 க்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் என் தந்தைக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று நான் என் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பூர்வீக பாத்தியம் என்று நான் எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் ஆதியில் தாவா சொத்துக்களுக்கு என் தந்தையின் தகப்பனார் பெயரில் பட்டா இருந்து அவர் இறந்த பிறகு என் தந்தை பெயரில் பட்டா மாறியது. என் தாத்தா பெயர் மொட்டையன். என் தாத்தா பெயரில் பட்டா இருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்தேனே என்றால் தாக்கல் செய்யவில்லை. 1, 2 பிரதிவாதிகள் எனக்கு பங்காளி முறையாகும். 1, 2 பிரதிவாதிகளின் தந்தை பெயர் கலியன் என்றால் சரிதான்.

2) 1, 2 பிரதிவாதிகளின் தாத்தா பெயர் முத்து என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் தாவா 1வது இன சொத்தை பொறுத்து மு.கலியன் பெயரிலும், தாவா 2 வது இன சொத்தைப் பொறுத்து 1) மொ.சீரங்கன், 2) மொ.கலியன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்களை பொறுத்து என் தந்தை, என் சகோதரர் மருதமுத்து பெயரில் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் செட்டில்மெண்ட் ஆவணமாகும். அது **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.2 ல் இணைக்கப்பட்டுள்ள கணினி சிட்டாவில் பட்டாதாரர் பெயர் மு.கலியபெருமாள்

என்று உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பட்டா பாஸ்புத்தகம் வருவாய் வட்டாட்சியரால் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். தாவா 2 இன சொத்துக்களில் 2ம் இன சொத்து மட்டும் தான் எங்களுக்கு பாத்தியம் என்றாலும் 1 இன சொத்தானது 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், என் தந்தையின் பெயரும், 1, 2 பிரதிவாதிகளின் தந்தையின் பெயரும் ஒரே பெயராக இருந்த ஒற்றுமையை பயன்படுத்தி என் தந்தை, எனது சகோதரர் பெயருக்கு மோசடியாக பி.வா.சா.ஆ.2 ஐ ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல.

3) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6ல் கிஸ்து ரசீது பட்டா எண் மட்டும்தான் குறிப்பிடபட்டிருக்கிறது. புல எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ல் வீட்டு வரி ரசீதில் புல எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 வீட்டு வரி ரசீதானது தாவா 2ம் இன சொத்தில் உள்ள எங்கள் வீட்டிற்கு கட்டியது என்றால் சரியல்ல. வழக்கிற்காக வா.சா.ஆ.7 ஐ தாவா சொத்துக்களுக்கு செலுத்தியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 குடிநீர் வரி ரசீதானது தாவா 2ம் இன சொத்தில் உள்ள எங்கள் வீட்டிற்கு கட்டியது என்றால் சரியல்ல. வழக்கிற்காக வா.சா.ஆ.8 ஐ தாவா சொத்துக்களுக்கு செலுத்தியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் 20.06.2018ம் தேதியில் ஆஸ்பெட்டாஸ் ஷீட் அமைக்க பிரதிவாதிகள் ஆட்சேபித்து ஊர் முக்கியஸ்தர்கள் மூலம் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரிதான். அதன்பின்னர் உடையார்பாளையம் காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் என் பெயரில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். நானும் புகார் கொடுத்துள்ளேன். நான் புகார் கொடுத்ததற்கு ஆதரவாக நீதிமன்றத்தில் மனு ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வதுபோல் நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும், பிரதிவாதிகள் புகார் கொடுத்தார்கள் என்றாலும் ஆவணங்கள் என் பெயரில் இருக்கிறது என்றும், நான் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு

தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

5) தாவா 1ம் இன சொத்து என் அனுபவத்தில் இருந்ததாக சொல்லியுள்ளது தவறு என்றாலும், 20.06.2018 தேதியில்தான் நான் எனது ஆட்களுடன் சேர்ந்து ஆக்கிரமித்துகொண்டேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்துக்களில் 3 தலைமுறைகளாக எனது முன்னோர்கள் அனுபவத்தில் இருந்து வந்ததாக கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் 1வது இன சொத்தில் நான் ஆக்கிரமித்து கட்டியுள்ள ஆஸ்பெட்டால் ஷீட்டை அப்புறப்படுத்தி தர வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் 1வது இன சொத்தை பொறுத்து எந்த பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றாலும், 1வது இன சொத்தை பொறுத்து தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிரிடை கோரிக்கைப்படி பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. தாவா 1வது இன சொத்தைப் பொறுத்து எனது தகப்பனார் பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி தாவா 1வது இன சொத்தைப் பொறு்த்து என் தந்தை எனது சகோதரருக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரமும், என் சகோதரர் எனக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரமும், தாவா 1வது இன சொத்தைப் பொறுத்து செல்லதக்கதல்ல 1, 2 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

ஒப்பம்/−திரு.S.கணேஷ், M.Com., M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.